1995 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்யாறு வட்டத்தில் அமைக்கப்பட இருக்கிற சிப்காட் தொழில் வளாகத்திற்கு இப்போது அரசு ஆணைப் பிறப்பித்து நில ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்த நிலச் சொந்தக்காரர்களை அழைத்துப் பேசுவதற்குண்டான முயற்சியில் அரசு ஈடுபட்டு உள்ளது. அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்பைக் கொடுப்பார்களானால் அவர் குறிப்பிட்ட தேதிக்கு முன்னாலேயே அந்தப் பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்களுடைய கேள்வி. அதனால் உங்களுக்கு துணைக் கேள்வி ஒன்று தான்.

வினா எண் 255, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

255—

கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

***26072**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நல்ல தரமான உற்பத்தியை செய்து கொடுத்தால், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியைப் பெருக்குகின்ற அளவுக்கு வகையான துணிகளை உற்பத்தி செய்து கொடுத்தால் அரசு ஏற்றுமதி செய்வதற்கு முன்வரும்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன சின்ன இழை பின்னி பின்னி வரும், சித்திரை கைத்தறி சேலையடி; எங்கள் தென் நாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி, என்று சொல்லுகின்ற அந்தப் புதிய மொழிக்கு ஏற்ப நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எங்களுடைய தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடியில் நல்ல தரமான கைலிகள் நெய்யப்படுகின்றன. இந்தக் கைலிகளை அரசு மூலமாக வெளிநாட்டுக்கு அனுப்பி அன்னியச் செலாவணியைப் பெற முடியும் என்ற காரணத்தால் இதனைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ஏற்றுமதி செய்வதை விட அவர்களுக்கு அதிகமான லாபம் தனியார் மூலம் கிடைப்பதால் அந்த லுங்கிகளை அவர்கள் தனியார்களுக்கு விற்று விடுகிறார்கள். தனியார் மூலம் ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் எங்களுக்குக் கிடைக்கிற ஆர்டர்கள்- - அலங்காரத் துணி வகைகள், பூந்துவாலைகள், மேஜை விரிப்புகள், சிறிய கைத்துண்டுகள் போன்றவைகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் ஆர்டர் கிடைக்கிறது. அந்த ஆர்டர்களை நாங்கள் உடனடியாகத் தருவதற்கு தயாராக இருக்கிறோம். அதை அவர்கள் செய்து கொடுத்தால் உடனடியாக ஏற்றுமதி செய்ய அரசு முன்வரும்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தத் தொழிலாக விளங்கி வரும் நெசவுத் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இன்றைக்கு அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு பல்வேறு குடியிருப்புகள், அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகள், மருத்துவமனைகள் கட்டிக்கொண்டிருக்கின்ற இந்த நல்ல ஆட்சியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இன்றைக்கு நம்முடைய மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தவேளையில் நம்முடைய தமிழகத்திலிருந்து எவ்வளவு கைத்தறித் துணிகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டு ஒரு கோடியே 16 லட்சம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1992-93 ஆம் ஆண்டு 2 கோடியே 65 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1993-94 ஆம் ஆண்டு

1995 ஏப்ரல் 6]

1 கோடியே 22 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது; 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய ஒரு கோடியே 10 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

256—

நரிக்குடியில் நூற்பு ஆலை அமைத்தல்.

***38810—**திருமதி வி. ஜி. மணிமேகலை :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி வட்டம், நரிக்குடியில் நூற்பு ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்களின் நன்மையைக் கருதி அக்குடிமக்களைத் தழுவியே நல்ல ஆட்சியை செய்யும் அரசனது கட்டளையை — அந்த மக்கள் அவருடைய கட்டளையை தலைமேற்கொண்டு செயல் ஆற்றுகின்ற வகையில் வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க இன்றையதினம் தமிழக மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கட்டளையை ஏற்று நடந்து வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று கூறிவிட்டார்கள். சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சி தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலே அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கக்கூடிய நரிக்குடியில் ஒரு நூற்பாலை அமைத்துக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியை அந்தத் தொகுதி மக்களிடையே கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.